லிருந்தும் வெளியே போகும். ஹோசூரில் நல்ல ராகி விளைகிறது. தடை இல்லையென்றால் அப்படியே அது பெங்களூருக்குப் போயிருக்கும். அவை பெங்களூரில் ஒன்றும் 'சர்ப்ளஸ்' இல்லை. இந்தத் தடையை நீக்கவேண்டுமென்று வியாபாரிகளும், மற்றவர்களும் கோரினார்கள். அது மாநிலத்திற்கு நல்லதல்ல என்ற காரணத்தால் நான் அதற்கு இணங்கவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : உணவுக் கார்ப்பரேஷன் மூலமாக கோதுமைப் பண்டங்கள், பருப்பு முதலிய வற்றைக்கூட விநியோகம் செய்யும் பொறுப்பு அவர்களிடத்தில் ஒப்படைக்கப் படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் இல்லை

UNSTARRED QUESTIONS

தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையினர் வாங்கிய டயர்கள்.

1—

கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1963–64-ல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் எத்தனை டயர்கள் வாங்கப்பட்டன ?

(இ) அவைகள் ஒவ்வொன்றும் எத்தனை முறை **Retread** செய்யப்பட்டது ?

பதில்—

(அ) 1963–64-ல் பின்வரும் அளவுகள் உள்ள 2,807 டயர்களை தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை வாங்கியது.

அளவு.	எண்ணிக்கை.
8·25 × 20	561
9·00 × 20	2,246
மொத்தம் ..	2,807

(இ) சாதாரணமாக டயரின் தேய்மான நிலையையொட்டி, டயர்கள் 2 அல்லது 3 முறை புதுப்பிக்கப்படுகிறது. 1963–64-ல் தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையிலுள்ள டயர் புதுப்பிக்கும் யூனிட்டுகளால் 8·25 × 20, 9·00 × 20 அளவுள்ள 5,807 டயர்கள் புதுப்பிக்கப்பட்டன.

(*a*) During 1963–64, 2,807 numbers of tyres were purchased by the Madras State Transport Department of the following sizes.

Size.	*Nos.*
8·25 × 20	561
9·00 × 20	2,246
Total	2,807

[28th July 1965

(*b*) The tyres are normally retreaded two to three times depending on the condition of the tyres. During 1963–64, 5,807 retreadings were done in sizes 8·25×20 and 9·00×20 in the retreading unit of the Madras State Transport Department.

பஞ்சாயத்து அமைக்கப்படாத கிராமங்கள்.

2—

கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : திரு. கி. நாராயணசாமி பிள்ளை : } கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நமது ராஜ்யத்தில் இதுவரை பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படாத கிராமங்கள் எவையேனும் இருக்கின்றனவா ?

(இ) தாலுகா வாரியாக அத்தகைய கிராமங்களின் (1) பெயர் (2) ஜனத்தொகை விவரமென்ன ?

(உ) இன்னும் அவைகள் பஞ்சாயத்துக்களாக அமைக்கப்படாததற்கு காரணமென்ன ?

(எ) அவைகள் எப்போது பஞ்சாயத்துக்களாக அமைக்கப்படும் ?

பதில்—

(அ) ஆம்.

(இ), (உ), (எ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	பஞ்சாயத்தில்லாத கிராமங்களின் பெயர் (தாலுகா வாரியாக).	மக்கள் தொகை.	இக் கிராமங்களை பஞ்சாயத்துக் கிராமங்களாக அமைக்காததற்குக் காரணம். எப்பொழுது அவை பஞ்சாயத்துக் கிராமங்களாக அமைக்கப்படும்.
(1)	(2)	(3)	(4)
	கடலூர் வட்டம்.		
1 தென் ஆற்காடு.	1 பெரமத்தூர்		2-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கிராமங்கள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன் பகுதியில் அமைந்துள்ளவை. இவற்றை நகரப்பகுதியாக (Township) அமைப்பதற்கான திட்டங்களைக் குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.
	2 வெள்ளையன்குப்பம்		
	3 இளவரசம்பட்டு		
	4 கூரைப்பேட்டை		
	5 ஆத்திப்பட்டு		
	6 வேலுடையான்பட்டு		
	விருத்தாசலம் வட்டம்.		
	1 ஆலண்டர்கொல்லை		
	2 வேளாங்குளம்		
	3 கோவில்குப்பம்		
	4 கங்கைகொண்டான் (பகுதி)		

28th July 1965]

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	பஞ்சாயத்தில்லாத கிராமங்களின் பெயர் (தாலூகா வாரியாக).	மக்கள் தொகை.	இக் கிராமங்களை பஞ்சாயத்துக் கிராமங்களாக அமைக்காததற்குக் காரணம். எப்பொழுது அவை பஞ்சாயத்துக் கிராமங்களாக அமைக்கப்படும்.
(1)	(2)	(3)	(4)
	காஞ்சீபுரம் வட்டம்.		
2 செங்கற்பட்டு.	புஞ்சரசந்தாங்கல்	500-க்கும் குறைவு.	இந்த கிராமத்தின் மக்கட் தொகை 500-க்கும் குறைவு. எனவே இணை அபிவிருத்தி கமிஷனர் இக்கிராமத்தை பஞ்சாயத்தல்லாத கிராமமாக அமைக்கும்படி ஆணையிட்டார். அண்மையில் உள்ள வளத்தோட்டம், அய்யங்கார் குளம், கோளிவாக்கம் பஞ்சாயத்துக்கள் இக்கிராமத்தைத் தங்கள் பஞ்சாயத்தில் சேர்த்துக்கொள்ளத் தயாராகவில்லை.
	திருச்சிராப்பள்ளி வட்டம்.		
3 திருச்சிராப்பள்ளி.	1 ஆலத்தூர், வரகனேரி, கொட்டப்பட்டு ரெவின்யூக் கிராமங்களின் பகுதி.	18,925	இப்பகுதியை நகரப்பகுதியாக அமைப்பது பற்றிய திட்டங்களை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.
	2 செங்குளம், அகரம், அரியமங்கலம், ரெவின்யூக் கிராமங்களில் சில பகுதி. இப்பகுதிகள் பொன்மலை ரயில்வே காலனியைச் சேர்ந்ததாகும்.		
	பழனி வட்டம்.		
4 மதுரை.	பண்ணைக்காடு	7,557	இப்பகுதியைப் பஞ்சாயத்துப் பகுதியாக அமைக்கும் திட்டங்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளன.

(*a*) Yes.

(*b*)
(*c*) } The particulars are furnished below.
(*d*)

[28th July 1965

Serial Number and name of the district.	Names of the non-panchayat villages, taluk-war.	Population.	Reasons for not constituting panchayats for the non-panchayat villages and when panchayat will be constituted for such non-panchayat villages.
(1)	(2)	(3)	(4)
	Cuddalore taluk		
1. South Arcot	1. Peramathur 2. Vellayankuppam 3. Elevarasampattu 4. Kooraipettai 5. Athipattu 6. Veludayampattu		The villages referred to in column 2 are lying in the area of Neyveli Lignite Corporation for which proposals for the constitution of Town ship is under consideration of Government.
	Vriddhachalam taluk— 1. Alandarikottai 2. Velangulam 3. Koilkuppam 4 Gangaikondam (part)		
	Kancheepuram taluk—		
2. Chingleput	Punjarasanthangal	Below 500	As the population of the village is below 500, the Joint Development Commissioner has ordered it to be a non-panchayat village. The adjacent panchayats of Valathottam, Ayyankarkulam and Kolivakkam are not willing to accept its merger with their panchayat.
	Tiruchirappalli taluk—		
3 Tiruchirappalli.	Portions of Alathur, Varaganeri and Kottappattu revenue villages and some area in Inam Sengulam, Agaram and Ariyamangalam revenue villages comprised in Golden Rock Railway colony.	18,925	Proposal to form a Township is under consideration of the Government.
	Palani taluk—		
4. Madurai	Pannaikadu	7,557	The proposals for constituting panchayats for the area have been deferred for the present.

28th July 1965]

இராமநாதபுரம் மாவட்ட ஹரிஜன காலனிகள்

3—

கேள்வி—திரு. செ. மாதவன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காரியாப்பட்டி, சாத்தூர், சிவகாசி ஆகிய ஊராட்சி ஒன்றிப்புகளில் கட்டப்பட்ட ஹரிஜன காலனிகள் இடிந்து கிடப்பது உண்மையா ?

பதில்—

கேட்கப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

காரியாப்பட்டி வட்டாரம்—மல்லான் கிணறு

காலத்தாலும் சட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைப் பராமரிப்பதில் அவற்றில் வாழும் ஹரிஜனங்களின் கவனக்குறைவாலும் 40 வீடுகளில் 22 வீடுகள் இடிந்து வீழ்ந்தன. எஞ்சியுள்ள 18 வீடுகளில் வாழ்பவர்களே வீட்டைச் சீர்செய்து கொண்டு குடியிருக்கிறார்கள்.

சாத்தூர் வட்டாரம்—மேட்ட மலை

1958–59-ல் மேட்ட மலையிலுள்ள காலனியில் கட்டப்பட்ட வீடுகளைப் பழுதுபார்க்க வேண்டியிருந்தது. அந்த வீடுகளைச் செப்பனிடுவதற்காக 1964 செப்டம்பர் மாதம் அரசாங்கம் ரூ. 2,500 அனுமதித்தது.

விரபாண்டிபுரம் கிராமத்திலுள்ள ஹரிஜனக்காலனி

இந்தக் காலனி வீடுகளை நிர்வகிப்பதில் அங்கு வாழ்வோரது கவனக் குறைவால் அவ்வீடுகளைப் பழுதுபார்க்கவேண்டியிருந்தது. அவ்வீடுகளைப் பழுது பார்க்க 1964 ஏப்ரல் மாதம் அரசாங்கம் ரூ. 2,500 அனுமதித்தது.

சிவகாசி வட்டாரம்—மதியசேனை கிராமத்திலுள்ள ஹரிஜனக் காலனி

இந்தக் காலனி, அங்கு குடியிருப்பவர்களால் கட்டப்பட்டதாகும். அந்தக் காலனியில் 28 வீடுகள் நல்ல நிலையில் உள்ளன. இரண்டு வீடுகள் இடிந்து வீழ்ந்தன; இரண்டு வீடுகள் சரியாகக் கட்டி முடிக்கப்படவில்லை.

The information is furnished below :—

Kariapatti Block—Mallankinar.

Due to efflux of time and on account of the carelessness of the beneficiary Harijans in maintaining the constructed houses, 22 out of 40 houses fell down. The beneficiaries are residing in the remaining 18 houses by repairing them themselves.

Sattur Block—Mettamalai.

The houses in the colony at Mettamalai constructed during 1958–59 required repairs and the Government sanctioned a sum of Rs. 2,500 in September 1964 for carrying out repairs to those houses.

Harijan Colony in Veerapandiapuram village

Due to carelessness of the beneficiaries in the maintenance of the houses, the houses required some repairs. The Government have sanctioned a sum of Rs. 2,500 in April 1964 for carrying out repairs to these houses also.

[28th July 1965

Sivakasi Block—Harijan Colony at Mathiasenai village

This colony was constructed by the beneficiaries themselves. 28 houses in that colony are in good condition, 2 houses had fallen down and 2 houses had not been completed properly.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகள்

4—

கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில உள்ள மொத்த ஏரிகள் எத்தனை ?

(இ) மராமத்து செய்யப்பட்டது எத்தனை ?

பதில்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மொத்த ஏரிகள்	6,346
(இ) மராமத்து செய்யப்பட்டவை	1,988
(உ) மராமத்து நடந்து கொண்டிருக்கும் குளங்கள்.	855
(*a*) Total number of tanks in Ramanathapuram district	6,346
(*b*) Number of tanks repaired ..	1,988
(*c*) Number of tanks under execution ..	855

கரம்பக்குடி நகர பஞ்சாயத்துக் கட்டிடம்

5—

கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகர பஞ்சாயத்துக் கட்டிடம் மிகவும் பழமையாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

பதில்—

(அ) ஆம்.

(இ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடத்தைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் எதுவுமில்லை. ஆனால் அதை மேலும் சீராக்குவதற்காக 1965–66-ம் ஆண்டிற்கான இப் பஞ்சாயத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4,000 வகை செய்யப்பட்டுள்ளது.

(*a*) Yes.

(*b*) There is no proposal to remodel the office building of the Karambakudi Town Panchayat. A sum of Rs. 4,000 has been provided in the Budget Estimate of the Panchayat for the year 1965–66 for making improvements to the building.

வந்தவாசி நகருக்குக் குடிநீர்

6—

கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி நகருக்குக் குடி நீர் திட்டத்திற்கான அனுமதி எப்போது வழங்கப்பட்டது ?

(இ) இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(உ) அதில் கடன் எவ்வளவு ? மானியம் எவ்வளவு ?

(எ) அத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும் ?

28th July 1965]

பதில்—

(அ) 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வழங்கப்பட்டது.

(இ) ரூ. 12·08 லட்சமாகும்.

(உ) அரசாங்கக் கடன்—ரூ. 5·30 லட்சம்.
அரசாங்க மானியம்—ரூ. 6·78 லட்சம்.

(எ) இத்திட்டம் எப்போது பூர்த்தியாகுமென்று முன்கூட்டியே சொல்வதற்கில்லை.

(*a*) In February 1963.

(*b*) Rs. 12·08 lakhs.

(*c*) Government loan—Rs. 5·30 lakhs,
Government grant—Rs. 6·78 lakhs.

(*d*) It will *not* be possible to forecast the exact date of completion of the scheme.

ஹரிஜன மற்றும் பிற்பட்ட மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கல்

7—

கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன மாணவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்கள் வாங்கித் தருவதற்காக ஹரிஜன நல இலாகா 1964-ம் ஆண்டில் மாவட்டந்தோறும் செலவிட்ட தொகை எவ்வளவு ?

(இ) ஹரிஜன நல இலாகா ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கும் உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் வழங்குகிறதா ?

பதில்—

(அ) ஹரிஜன மாணவர்களுக்கும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்கள் வாங்கித் தருவதற்காக, ஹரிஜன நலத்துறை 1964-ம் ஆண்டில் செலவழித்த தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

		ரூ.	காசு.
1	செங்கற்பட்டு	22,307	98
2	கோயம்புத்தூர்	2,014	89
3	மதுரை	16,570	80
4	நீலகிரி	5,999	38
5	வட ஆர்க்காடு	33,961	27
6	இராமநாதபுரம்	4,772	22
7	சேலம்	11,028	72
8	தென் ஆர்க்காடு	31,379	67
9	திருநெல்வேலி	1,670	62
10	திருச்சிராப்பள்ளி	42,700	36
11	தஞ்சாவூர்	31,443	25
12	சென்னை	6,944	82
13	கன்னியாகுமரி	இல்லை.	
	மொத்தம் ..	2,10,793	98

(இ) ஆம்.

[28th July 1965

(*a*) Expenditure incurred by the Harijan Welfare Department towards purchase of books to Harijan and Backward class pupils in 1964 is given below :—

		RS.	P
1	Chingleput	22,307	98
2	Coimbatore	2,014	89
3	Madurai	16,570	80
4	The Nilgiris	5,999	38
5	North Arcot	33,961	27
6	Ramanathapuram	4,772	22
7	Salem	11,028	72
8	South Arcot	31,379	67
9	Tirunelveli	1,670	62
10	Tiruchirapalli	42,700	36
11	Thanjavur	31,443	25
12	Madras City	6,944	82
13	Kanyakumari	Nil.	
	Total ..	2,10,793	98

(*b*) Yes.

அரிசி ஆலைகள்

8—

கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரிசி அரைத்து விற்பனை செய்யும் பெரிய ஆலைகள் எத்தனை ? (மாவட்டவாரியாக)

(இ) தனியார் வசம் எத்தனை ? பொதுத்துறை அல்லது கூட்டுறவுத் துறையில் எத்தனை ?

(உ) தமிழகத்தில் நெல் அரைத்துக் கொடுக்கும் சாதாரண அரைவை ஆலைகள் மாவட்ட வாரியாக எத்தனை ?

(எ) எத்தனை இடங்களில் கைக்குத்தலரிசி தொழிற்கூடங்கள் உள்ளன ?

Answer—

(*a*) to (*d*) A statement [a] is appended.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—ADJOURNMENT MOTION.

PROCUREMENT OF PADDY IN ERODE AREA AGAINST RULES.

MR. SPEAKER : The hon. Member Sri K. R. Nallasivam has given notice of an adjournment motion under Rule 42. In this connection, I wish to make certain general observations. Before I do so, I shall first read the motion given notice of by the hon. Member.

" கோவை மாவட்டம் ஈரோடு பகுதியில் விதி முறைக்கு மாறான முறையில் நெல் கொள்முதல் ஏழை எளிய விவசாயிகளிடம் செய்வதால் ஏற்பட்டுள்ள அவசர நிலைமை "

[a] **Printed as Appendix II on page 216**